(ii) தனியாக ஊராட்சி ஒன்று அமைக்க வேண்டியும், விண்ணப்பம் ஏதும் அரசிற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம். மதுரை மாநகராட்சியில் பெறப்பட்டுள்ளது.

(இ) மதுரை மாநகராட்சி அடிப்படை வசதிகளைச் செய்வதில்லை என்ற காரணத்தைக் கூறி முறையீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) அரசுக்கு இதுபற்றி குறிப்பு ஒன்றும் வரப்பெறவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-40)

2. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி எட்டாவது அறிக்கையை அளித்தல்.

திரு. ஆர். சக்திமோகன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் தலைவர் சார்பில் அரசு உறுதி மொழிக் குழுவின் இருபத்தி எட்டாவது அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

3. அரசின் தீர்மானம்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சென்னை மத்திய சிறைச்சாலையில் 1976 பிப்ரவரி முதல் 1977 பிப்ரவரி வரையிலான கால அளவில் அரசியல் கைதிகளைக் கொடுமைப்படுத்தியதாகவும், அடித்ததாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட மாண்புமிகு திரு. எம். எம். இஸ்மாயில் அவர்களின்